# செங்கம்
# நடுகற்கள்

பதிப்பாசிரியர்
டாக்டர். இரா. நாகசாமி
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை
1972

முதற் பதிப்பு 1972
தொ. பொ. ஆ. துறை எண் 21

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

செங்கம் நடுகற்கள்

டாக்டர் இரா. நாகசாமி

விலை :

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தின்
அச்சிடப்பெற்றது.

# முன்னுரை

சென்னை மாநகர்க் கல்வெட்டுக்களையும், கன்னியாகுமரிக் கல்வெட்டுக் களையும் ஆய்ந்தவுடன், 1971-ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம் செங்கம் பகுதி ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பகுதியில் கல்வெட்டு ஆய்வு இதுகாறும் சரிவரச் செய்யப்படவில்லை. இது காடுகளும் மலைகளும் நிறைந்த பகுதி. இடர்பாடுகள் பலவற்றை எதிர்த்துத்தான் கல்வெட்டுக்களைப் படி எடுக்கவேண்டும். இவ்வாறு இத்துறையால் எடுக் கப்பட்ட பல கல்வெட்டுக்கள் தமிழக வரலாற்றுக்குப் பல புதிய செய்தி களைத் தந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இந்நடுகற்கள் வரலாற்றிற்கும், இலக்கியத்திற் கும் அளிக்கும் புதிய செய்திகளால் தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த் துள்ளன. ஆதலின் இவை மட்டும் இத்தொகுதியில் இடம் பெறுகின் றன. தொடர் எண் இத்துறையால் அவ்வாண்டு படி எடுக்கப்பட்ட அனைத்துக் கல்வெட்டுகளுக்கும் இடப்பட்டதாகும்.

இவற்றைப் போர் முனை வீரர்கள் போல் கல்லும், முள்ளும், காடும், மலையும் கருதாது, கால் நடையாகவே ஊர் ஊராகச் சென்று தேடிக் கண்டுபிடித்தும், படித்தும் அளித்த கல்வெட்டாய்வாளர்கள் திருவாளர்கள் நடன. காசிநாதன், கு. தாமோதரன், ச. ஹரிஹரன், மா. சந்திரமூர்த்தி முதலியோர்க்கும், அவர்களுடன் உழைத்த சிற்றெழுத் தர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள் ளோம். திரு. நடன. காசிநாதன் இக்கல்வெட்டுகளைப் பிழையறப் படித்து வரலாற்றுக் குறிப்புரை எழுதி உதவியதோடின்றி, பிழை திருத்தி அச் சாக்கும் பொறுப்பையும் ஏற்று பணியாற்றியுள்ளார். அச்சுப் பிரிவினர் அயராது உழைத்து, இதை விரைவில் வெளிக் கொணரப் பணியாற்றி யுள்ளனர். நடுகற்கள் சில, செங்கம் வட்டம் தொரைப்பாடியில் இருப் பதைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, ஆராய்ச்சி மாணவர் திரு. நாகலிங்கம் இத்துறையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். மேலும் இவ்வாய்வு தொடர்ந்து நடைபெறுகிறது. முழுமையும் படி எடுத்த பின்னர்தான் வரலாற்றில் மேலும் தெளிவு ஏற்படும்.

இரா. நாகசாமி

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 33

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வடஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 2?-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 6-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | தொரைப்பாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயிலில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும், வலது காலின் பக்கத்தில் சிமிழும் உள்ளன. உருவத்தின் வலப்பக்கத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் இரண்டாவது ஆட்சி ஆண்டில் கங்கரசர் மக்கள் பொன்னந்தியார் பெருமுகை மீது போர் தொடுத்தபொழுது, கங்கரசரின் சேவகரும், ராற்றூரை ஆண்டவருமான குன்றக்கண்ணியார் என்பார் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய மயேந்திர
2 பருமற்கு [றண்ணு] ஆவது க
3 ங்கரைசரோடு பவ்வது கங்
4 கரைசரு மக்கள் பொன்
5 னந்தியாரு பெருமுகை
6 எறிந்த ஞான்று கங்க
7 ரைசரு சேவகரு எறிந்து
8 பட்டாரு ராராற்றூ ஆண்ட
9 குன்றக் கண்ணியார்
10 கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 12-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | தொரைப்பாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | இரண்டாம் நரசிம்மன்? | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் சிமிழ் உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நரசிம்மவர்மனின் பன்னிரண்டா ஆட்சி ஆண்டில் கொங்கணி அரசர் மகன் வா . ச்சனைச் சிரிகங்கரசர் தாக்கி போது அப்போரில் சிரிகங்கரசர் சேவகர் கொற்றவிணற்ற குன்றனர் வீ மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. எழுத்து வளர்ச்சியுற்ற நிலையில் உள்ளது

கல்வெட்டு :

1 கோவியைஅ நரைசிங்க பருமற்கு யாண்டு [பன்]
2 னிரண்டாவது கொங்கணி அரைசர் மகன் வா .
3 ச்சன் மேற்சென்று சிரிகங்கரைசர் செ .
4 வோர் எறிந்த ஞான்று பட்டார் சிரிகங்கரைசர் சேவ
5 கர் கொற்றவிணற்ற குன்றனர் கல்

மாவட்டம் : வட ஆர்க்காடு
வட்டம் : செங்கம்
ஊர் : சாத்தனூர் (மல்லிகாபுரம்)
மொழி : தமிழ்
எழுத்து : வட்டெழுத்து
அரசு : பல்லவர்
மன்னன் : மகேந்திரவர்மன்

ஆட்சி ஆண்டு : 39-ஆம் ஆண்டு
வரலாற்று ஆண்டு : கி. பி. 7-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் உள்ளன. உருவத்துக்கு மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் முப்பத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில் சக்கரவரு படை சருக்கிருந்த ஊர் போந்தையைத் தாக்கியபோது ஞக்கையாரின் பெயரனும் வத்தாவனின் மகனுமான நந்தி வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய மசீந்திரபரு
2 மற்கு முப்பத்தொன்பதாவது
3 வாணகோ அரைசரு மருமக்கள் பொ
4 ற்றெருக்கையார் சருக்கிருந்த ஊர் போ
5 ந்தை மேற் சக்கரவரு படை வந்த ஞா
6 ன்று ஞக்கையார் இளமகன் வத்தாவ
7 ன் மகன் னந்
8 [தி எறி]ந்து பட்டா
9 ன் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 11-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சாத்தனூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | முதலாம் நரசிம்மவர்மர்? | | |

இடம் : வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடக்கை நீட்டியும் வலக்கையில் குறுவாளும் இருக்கின்றன. உருவத்தின் மேற் பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நரசிம்மவர்ம னின் பதினோராம் ஆட்சி ஆண்டில் மேற்கோவலூர் நாட்டைச் சேர்ந்த அளவிற் பாடி கடிபகையார் ஆநிரைகளைக் கவர்ந்தபோது அவற்றை மீட்ட உணங்க யாரின் மகனான கோத்தையார் என்பாரின் சேவகர் ஆராகவண்கரின் மக்கள் கணிமாதன் வீர மரணம் எய்தியதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரைசிங்
2 க பருமற்கு பதினொன்
3 ருவது மேற்கோவலூர் நாட்டு அள
4 இற்பாடி கடிபகையார் தொறு கொண்ட [ஞா]
5 ன்று சென்று தொறு இடுவித்து பட்டாரு உணங்க
6 யார் மகனர் கோத்தையார் சேவகன் ஆரோகவண்க
7 ர் மக்கள்
8 கணிமாத
9 னர் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 4-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 911 |
| ஊர் : | அய்த்தாம்பாளையம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் கீழ்ப்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் நான்காம் ஆட்சி ஆண்டில் பாண அரசர் வேட்டு வதியரையரின் ஆளும் மேற்கோவலூர் நாட்டைச் சேர்ந்த அளவிப்பாடியில் வாழும் ஆந்தைபொன்னி என்பானின் மகனுமான மொடையன் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோப்பரகேசரி பன்மர்
2 கு யாண்டு நான்காவது வாண
3 கோவரையர் [வேட்]டுவதியரை
4 யராள் மேற்கோவலூர் நாட்டு
5 அளவிப்பாடி உடைய ஆந்தை பொ
6 ன்[னி] மகன் மொடையன் தொறு மீட்டு
7 ப் பட்டான் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 14-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | வீரணம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | கம்பவர்மன் | | |

இடம் : அய்யனாரப்பன் கோயில், கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பக்கத்திலும், இடப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் கம்பவர்மனது பதினான்காவது ஆட்சி ஆண்டில், பாண அரசன் வயிரமேகன் வாணகோப்பாடியையும், இலாடைப்பாடியையும், மிலாட்டையும், சோழநாட்டைச் சேர்ந்த காவிரியின் வடகரையிலுள்ள பகுதிகளையும் ஆள்கின்றபோது; வேணாடு முந்நூறையும், எயில்நாடு ஐந்நூறையும் ஆண்டு வந்த நந்திப்பெருமானார் மகன் அக்கழிமல்லன் என்பார் வெண்ணத்தையும், சாத்தனூரையும் ஆண்டு வந்தார். அச்சமயம், மங்களநாட்டைச் சேர்ந்த மாதேவரின் படை சாத்தனூரைத் தாக்கியது. அப்போது வெண்ணத்தைச் சேர்ந்த மழநாடர் மொடப்பன், பின்பு சென்று போரிட்டு வேணாட்டெல்லையில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. இக்கல்லுக்குப் பக்கத்திலுள்ள கல்லில் குறிக்கப்பட்டுள்ள காராச்செங்கன் வீர மரணம் அடைந்ததையும் தெரிவிக்கும் வகையில் அவனுடைய பெயரும் இக்கல்லில் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய கம்பபோத்தரை
2 யர்க்கு யாண்டு பதினாலாவது வாண கோவரைய
3 ர் வஇரமேகனார் வாணகோப்பாடியும் இலாடைப் பா
4 டியும் மிலாடுஞ் சோழநாட்டுக் காவிரிஇன் வ
5 டகரை எல்லாமாளா நின்ற காலத்து வேணாடு முன்நூ
6 றும் மெஇனாடைந்நூறு ஆண்ட நந்தி பெ
7 ருமானார்
8 மகனார் அ
9 க்கழி மல்ல

10 ஞர் வென்ண
11 மு மிசாத்தனூ
12 ரும் மாளா நிற்க
13 மங்கள நா
14 டுடைய மா
15 தேவர் படை
16 சாத்தனூரரை
17 எறிய
18 வென்ண
19 முடைய
20 மழ நாட[ர்]
21 மொடப்ப
22 ன் பின்பு செ
23 ன்று பிண
24 ங்கி வேஞ
25 ட்டெல்லீ
26 யிற் காரா
27 ச்சங்கன்
28 ப்பட்டார்
29 மழநா
30 [டர்] கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் | கண்ணக்கந்தல் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : தரடாப்பட்டிலிருந்து கண்ணக்கந்தலுக்குச் செல்லும் சாலே ஓரம் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டு உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலேயில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில் இருக்கிறது. வலது கையில் உறையிலிருந்து குறுவாளே உருவும் நிலே. உருவத்தின் மேற்பகுதியில் இரு தோரணங்களும், இடது காலுக்கு அருகில் கண்ணுடியும், சிமிழும், கெண்டியும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் ஆட்சியில் பொன்னரம்பஞரின் சேவகனும் வளியப்பூராரின் மகனுமான தாளச்சாமி வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . . . . . . . . .
2 . . . மருமக்
3 . . . னரம்பஞ
4 . . . ண கோ அரைசரு
5 . . . கள் கந்தவிண்ண
6 . . . [ற]லப் புஞ்சிச் சென்ற
7 [ஞா]ன்று பொன்னரம்பஞர் சே
8 வகன் வளியப்பூரார் மக
9 ன் தா
10 ளச்சா
11 மி கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 38-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சே. கூடலூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | | |

இடம் : சுடுகாட்டின் அருகில் ஏரிக்கரையில் நிறுத்தப் பட்டிருக்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும், சிமிழும், வில்லுக்கு மேற்பகுதியில் தோரணமும் உள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் முப்பத்தெட்டாவது ஆட்சி ஆண்டில் பாண அருசருடைய மருமக்களான கந்தவிண்ணனர் கூடலில் ஆநிரை கவர்ந்தபோது பொன்னரம்பனர் கொல்லகச் சேவகன் காகண்டி அண்ணவன் என்பான் அவ்வாநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. இக்கல்லை கூடலைச் சேர்ந்த இளமக்கள் நட்டுவித்தனர் என்பதையும் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசை
2 ய மஇந்திர பரு
3 மற்கு முப்பத்தெட்டா
4 வது வாணகோஅரைசரு மரு
5 மக்கள் கந்தவிண்ண
6 ஞர் கூடல் தொறுக் கொண்ட
7 ஞான்று தொறு இடுவித்துப் பட்டா
8 ன் பொன்னரம்பனர் கொல்லகச்
9 சேவகன் காகண்டி அண்ணவன் கல்
10 கூடல் இள
11 மக்கள் நடுவி
12 த்த கல்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 44-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கீழ்இராவந்தவாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | நந்தீச்சுவரவிக்கிரமபருமர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : ஊரின் மேற்கேயுள்ள வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் வலப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. வலது கையில் வில்லும், இடது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வலது காலுக்குப் பக்கத்தில் சிமிழும், இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. வீரனின் வலது தோளில் அம்பு பாய்ந்துள்ளது. உருவத்தின் மேற்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நந்திவர்மனின் நாற்பத்து நான்காம் ஆட்சி ஆண்டில் மலாட்டு மேற்கோவலூர் நாட்டு இராமந்தைவாடி மேல் மங்களப்பெருமஞர் படை தாக்கிய பொழுது, வாணபெருமாஞரின் சேவகன் வேணர்க்களியன் என்பான் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நந்தீச்சுவ
2 ர விர்கிரமபருமற்கு யாண்டு நாற்பத்
3 து நாற்[1]காவது மலாட்டு மேற்கோவலூர் நா
4 ட்டு இராமந்தைவாடி மேற் மங்கள பெரு
5 மஞர் படை வந்த ஞான்று வாணபெருமாஞர்க் கா
6 ய்ப் பட்டான் வேணர்
7 க் களியன்

மாவட்டம் : வட ஆர்க்காடு
வட்டம் : செங்கம்
ஊர் : தா. வேளூர்
மொழி : தமிழ்
எழுத்து : வட்டெழுத்து
அரசு : பல்லவர்
மன்னன் : இரண்டாம் நரசிம்மவர்மன்

ஆட்சி ஆண்டு : 2-ஆம் ஆண்டு
வரலாற்று ஆண்டு : கி. பி. 8-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : *1933-34, எண். 69*
முன் பதிப்பு : எபிகிராபியா இந்திகா, தொகுதி 32, பக்கம் *110-111*
ஊர்க் கல்வெட்டு எண் : *1*

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் தாங்கிய நிலை. இடது காலின் பக்கத்தில் ஒரு சிமிழ் உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மனின் இரண்டாம் ஆட்சி ஆண்டில் பாண அரசரின் சேவகரும் மேல் கொன்றை நாட்டைச் சேர்ந்த மேல் வேளூரை ஆள்பவருமான பனையமாரியார் என்பார் ஆநிரைகளைக் கவர்ந்தபோது வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரசிங்கபருமற்கு இரண்டா
2 வது வாணகோஅ அதிரைசர்[1] சேவகர் மீ கொன்
3 றை நாட்டு மேல் வேளூர் ஆளும் பனையமா
4 ரியார்[2] இவ்வூர்த் தொறுக் கொண்ட ஞான்று பட்டா[ர்]

---

1. 'வாணகோன் அதிரைசர்' என்று எபிகிராபியா இந்திகா தொகுதி 32-இல் படிக்கப்பட்டுள்ளது.
2. 'பறையமாளியார்' என்று மேற்கூறிய நூலில் படிக்கப்பட்டுள்ளது

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 3-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9-ஆம் நூற்றூண்டு |
| ஊர் : | சின்னய்யன்பேட்டை | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | கம்பவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : சாவுமேட்டு வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. இக்கல்வெட்டு மூன்று தனிக்கற்களில் எழுதப்பட்டுள்ளது. வீரனின் உருவம் ஒரு கல்லிலும், கல்வெட்டின் முதல் ஏழு வரிகள் மற்றொரு கல்லிலும், பிற ஆறு வரிகள் மற்றொன்றிலுமாகப் பொறிக்கப்பட்டுள்ளன பல்லவ மன்னன் கம்பவர்மனின் மூன்றுவது ஆட்சி ஆண்டில் வயிரமேகவாணகோவரையரின் சேவகனும் மேல் குன்றை நாட்டு மலையனூரில் வாழும் செம்பத்தொண்டன் மகனுமான காரிப்பெருமான், பாசாற்றூரைச் சேர்ந்த எருமை நிரைகளை எயில் நாட்டார் கவர முற்பட்ட போது அவர்களை எதிர்த்துப் போரிட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய கம்ப
2 பருமற்கு யாண்டு மூன்ருவது
3 வயிரமேகவாணகோவரையர் சேவகன்
4 மீகுன்றை ஞாட்டு மலையனூருடைய செம்பத்
5 தொண்டன் மகன் காரிப்பெருமான் பாசா
6 ற்றெருமைத் தொறு எயினுட்டார் கொள்ளப்
7 பாசாற்றூர் பூசலிடப் பூசல் சென்று கோவூ
8 ர் நாட்டுச் சிற்றிடையாற்று முதுகொன்றை
9 மூக்கின் மீமலை அயங்கயக்கரையிற் செ
10 ன்று முட்டி மலையனூருடைய செம்பர் ம
11 கன்னுன காரிப்பெருமான்ணன் உ
12 ரையிலம்புமாள எவ்விப் பத்திர முரு
13 வி எதிரே சென்று பட்டான்

த. நா. தொ. ஆய்வுத்துறை　　　　தொடர் எண் : 1971 / 57

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 6-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சின்னய்யன்பேட்டை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | கம்பவர்மன் | | |

இடம் : சாவு மேட்டு வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : இக்கல்வெட்டு இரண்டு தனிக்கல்லிலும், வீரனது உருவத்துக்கு மேலும் பொறிக்கப் பெற்றுள்ளது. வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் தனிக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறு வாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டி உள்ளது. பல்லவ மன்னன் கம்பவர்மனின் ஆறும் ஆட்சி ஆண்டில் மேல்கொன்றை நாட்டிலுள்ள புளியூரைச் சார்ந்த எருமை நிரைகளைக் கவர்ந்து சென்றபோது, கொங்கு நாட் டைச் சேர்ந்த எழுமாத்தூர் என்னும் ஊரில் வாழும் சாகாடச் சிற்றன் என்பான் பின் தொடர்ந்து சென்று மேல்வேணாட்டைச் சேர்ந்த மணிக்கலவடலூரில் போரிட்டு அவ்வெருமை நிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. ஐந்தாம் வரிக்குக் கீழ் தலைகீழாகச் சில எழுத்துக்கள் எழுதப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1 கோவிசைய கம்பபர்மற்கு
2 யாண்டு ஆறுவது கொங்க
3 த் தெழுமாத்தூர் இருந்து
4 வாழுஞ் சாகாடச் சிற்றன்
5 மீகொன்றை நாட்டு
6 ப் புளியூர் எரு
7 மை கொண்ர ஞா
8 ன்று பூசல்லோடி
9 மேல் வேணாட்டு மணி
10 க்கலவடலூரில் முட்டி எ
11 ருமைத் தொறு மீட்டு மட்டா
12 ன் சாகாடச் சிற்றன்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 6-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி.பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | சின்னய்யன்பேட்டை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | கம்பவர்மன் | | |

இடம் : சாவுமேட்டு வேடியப்பன் கோயில்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. கல் உடைந்து தனியாக வீழ்ந்து கிடந்தது. வீரனது உருவம் பொறித்த கல் காணப்படவில்லை. பல்லவ மன்னன் கம்பவர்மனது 6-ஆம் ஆட்சி ஆண்டில் மேல் கொன்றை நாட்டுப் புளியூரைச் சேர்ந்த சாகாடச்சிற்றன் என்பான் புளியூரில் எருமை கவர்ந்ததைக் குறிக்கிறது. அவ்வாறு கவர்ந்தபோது அப்போர் நிகழ்ந்து, போரில் வீர மரணம் அடைந்தவரைக் குறிப்பதாக இக்கல்வெட்டு அமையும்.

கல்வெட்டு :

1 கோவிசைய கம்போதஅர்கி ய[ா]
2 ண்டு ஆறுவது மீய்கொன்றை நாட்டுப்
3 புளியூரிருந்து வாழுஞ் சாகாட
4 ச்சிற்றன் புளியூ எருமை[1] கொண்ட
5 ஞான்[று] பூசல்லோடி மே
6 மணிக்கல . . . .
7 . . . . . . . . . . . . . . . .

1. புளியூர் எருமை என்று படிக்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 34-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | எடுத்தனூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : ஊரின் மேற்கே உள்ள ஊமைவேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலின் பக்கத்தில் சிமிழும் கெண்டியும், வலது காலின் பக்கத்தில் காத்திருக்கும் நிலையில் ஒரு நாயும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உருவத்தின் மேற்பகுதியில் இரு தோரணங்களும் உள்ளன. மேற்பகுதியில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்து நான்காவது ஆட்சி ஆண்டில் பாண அரசருடைய மருமக்கள் பொற்ரெக்கையாரின் இளமகன் கருந்தேவக்கத்தி தன்னுடைய எருமைப் புறத்தே வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. வலப்பக்கத்தில் கோவிவன் என்னும் நாய் இரு கள்ளனைக் கடித்துக் காத்து நின்றதைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

I

1 கோவிசைய
2 மயிந்திர பருமற்கு
3 முப்பத்து நான்காவது வாணகோ
4 அரைசரு மருமக்கள் பொற்ரெக்கை
5 ஆர் இளமகன் கருந்தேவக்கத்தி தன்
6 னெருமைப்
7 புறத்தே வா
8 டி பட்டா
9 ன் கல்

II

1 [கோவிவ]

2 ன்னென்னு

3 ந் நாய் இ

4 ரு கள்ள

5 னைக் கடித்

6 துக் காத்திரு

7 ந்தவாறு

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 62

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 21-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி பி. 6-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கொட்டையூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | — | | |
| மன்னன் : | சோமாசிகோதிருமான் | | |

இடம் : சிறைமீட்டான் கோயிலில் மேற்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சோமாசிகோதிருமான் என்னும் மன்னனின் இருபத்தொன்றாவது ஆட்சி ஆண்டில் மேல் கொன்றை நாட்டுப் பெரும்புளியூர் அரசன் தொல்தேவர் படையெடுத்த பொழுது மறுஅதிரைசர் சேவகனை கதவசாத்தன் என்பான் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. சின்னய்யன்பேட்டைக் (கம்பவர்மனின்) கல்வெட்டில் மீகொன்றை நாட்டுப் புளியூர் குறிக்கப்பட்டுள்ளது. இக்கல்லில் காணப்பெறும் உருவம் தர்மபுரி மாவட்டம், கோரையாற்று சிம்மவிஷ்ணு காலத்திய நடுகல்லில் [1971/86] காணப்படும் உருவத்தை ஒத்துள்ளது. எனவே இது கி. பி. ஆறும் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம்.

கல்வெட்டு :

1 சோமாசி கோ திருமானில்கு
2 இருபத்தொன்றாவது மீகொன்
3 றை நாட்டு பெருபுளிஊர் தொல்[தே]
4 வரு சுட்ட ஞான்று மறு அதிரைச
5 ரு சேவகன் கதவசாத்த பட்டான்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 33-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கொட்டையூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | | |

இடம் : ஏரியின் கிழக்குக் கரையில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடதுகை வில்லைத் தாங்கியும், வலதுகை உடைவாள் மீதும் உள்ள நிலை. வில்லின் எதிரில் அம்புகளும், தூணியும் உள்ளன. இடது காலுக்குப் பக்கத்தில் கண்ணாடி, சிமிழ், கெண்டி ஆகியவை உள்ளன. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்து மூன்றாவது ஆட்சி ஆண்டில் வாணகோஅரைசர் மருமக்கள் பொன்னரம்பனார் மேல் வாணகோஅரைசர் மருமக்கள் கந்தவிண்ணனார் படையெடுத்துச் சென்றபோது கந்தவிண்ணனாரின் சிற்றப்பனார் பொன்னிதனாரின் இளமகன் பொங்கியார் மகன் கத்தி எய்து வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய ம
2 சீந்திரபருமற்கு
3 முப்பத்து மூன்றாவது
4 வாணகோ அரைசரு மரும
5 க்கள் பொன்னரம்பனார்
6 மேல் வாணகோ அரைசரு மரு
7 மக்கள் கந்தவிண்ணனா
8 ர் வேல்மறுத்திச் சென்ற ஞா
9 ன்று கந்தவிண்ணனா
10 ர் தஞ்சிற்றப்பானார் பொ
11 ன்னி[தன்]னார் இளமகன்
12 பொங்கியார் மகன் கத்
13 தி எய்து பட்டான் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 33-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | கொட்டையூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : ஏரியின் கிழக்கே உள்ள வயலில் வடக்குப் பார்த்து நிறுத்தப்பட்டிருக்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும், வலது கையில் வாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்து மூன்ருவது ஆட்சி ஆண்டில் வாணகோ அரசர் மருமக்களுள் பொன்னமன்னன்ஞர் மகன் பொன்னரம்பஞர் என்பவர் மேல் இண்ணபந்தரின் மகன் கந்தவிண்ணஞர் என்பவர் வெலட்டுண் மேல் சென்று தாக்கிய பொழுது கந்த விண்ணன்ஞரின் சேவகன் புதணடி மக்கள் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

**கல்வெட்டு :**

1 கோவியைய மயேந்திரபருமற்கு
2 முப்பத்து மூன்ருவது வாணகோ அரைசரு
3 மருமக்களுட் பொன்னமன்னன்ஞர் மகன்
4 ஞர் பொன்னரம்பஞர் மேல் இண்ணபந்த மகன்ஞர் கந்த[வி]ண்ணஞர் வெலட்டு[ண்]
5 மேல்ச் சென்றெறிந்த ஞான்று
6 நல்ல
7 ஞய் தி
8 ரிந்து ப
9 ட்டான்
10 கந்தவிண்ண
11 ஞர் [சேவக]

(திருப்பவும்)

மாவட்டம் : வட ஆர்க்காடு

வட்டம் : செங்கம்

ஊர் : எடக்கல்

மொழி : தமிழ்

எழுத்து : வட்டெழுத்து

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : இரட்டை வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டு முதற்பகுதியிலும் பக்கப் பகுதியிலும் உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்பக்கம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டி உள்ளது. உருவத்துக்கு மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. குன்றகட்டி என்பான் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1　. . . . . . . தி . . .
2　. பெண்ணை வடகரை மே . கொ . . .
3　. . நிக . இருந்து . . . தே . . .
4　. டு . மக்கள் குன்றகட்டி . . ரு பைய . . .
5　ரு தொறுக் கொண்ட ஞான்று பட்டாரு கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | தென்முடியனூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : குடியானவர் வேடியப்பன் கோயிலில் தெற்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டின் கடைப்பகுதியே உள்ளது. கல்லில் வீரனது உருவம் இடக்கையில் வில்லேந்திய தோற்றத்துடன் காணப்படுகிறது. அருகில் கெண்டி, கண்ணுடி, கலம் ஆகியவை உள்ளன. பிற்காலத்தில் வீரனது உருவம் ஆழமாகச் செதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். கலத்தையும் பிற்காலத்தில் சிவலிங்கமாகச் செதுக்கியுள்ளார்கள்.

கல்வெட்டு :

1 . னு . . . . . . . யார்
2 குதி[ரை] . . . மக்க
3 ண்ணமட் . .
4 குத்தி
5 பட்டான்
6 கல்

மாவட்டம் : வட ஆர்க்காடு

வட்டம் : செங்கம்

ஊர் : தண்டராம்பட்டு

மொழி : தமிழ்

எழுத்து : வட்டெழுத்து

அரசு : பல்லவர்

மன்னன் : முதலாம் நரசிம்மவர்மன்

ஆட்சி ஆண்டு : 7-ஆம் ஆண்டு

வரலாற்று ஆண்டு : கி. பி. 7-ஆம் நூற்றாண்டு

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : கிருஷ்ணரப்பன் கோயில், கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியில் இருதோரணங்களும், இடது காலுக்குப் பக்கத்தில் கண்ணடியும், கெண்டியும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், இடப்பக்கத்திலும், எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்ம வர்மனின் ஏழாம் ஆட்சி ஆண்டில் வாணகோ தன்சிற்றப்பன் பொன்மாந்தானூர் மீது படையெடுத்தபோது, பொன்மாந்தானூர்க்காக கடுவந்தையார் மகனை விற்சிதை என்பார் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரை
2 சிங்கபருமற்கு யா
3 ண்டேழாவது மேற்கோவ
4 லூர் மேல் வாணகோ முத்த
5 ரைசர் நாடு பாவிய தஞ்சிற்
6 றப்படிகள் பொன்மாந்தானூர் மேற்
7 வந்த ஞான்று பொன்மாந்தானூர்க்காய்ப் பட்டா
8 ன் கடுவந்தையார் மகன் விற்சிதை கல் வாண
9 கோக்கட
10 மர்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 7-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தண்டராம்பட்டு | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | முதலாம் நரசிம்மவர்மன் | | |

இடம் : கிருஷ்ணரப்பன் கோயிலில் தெற்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வலது கைக்கு மேல் தோரணம் ஒன்று உள்ளது. உருவத்தின் வலது பக்கம் சிமிழும், கண்ணடியும், இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. வீரனது உடலிலும், நெற்றியிலும் அம்புகள் தைத்துள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனின் ஏழாம் ஆட்சி ஆண்டில் வாணகோ தன்சிற்றப்பன் பொன் மாந்தானூர் மேற் படையெடுத்தபோது, துருமாவனூர் மகனை மாற்கடலன் என்பார் போரில் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நரை
2 சிங்கபருமற்கு யா
3 ண்டேழாவது வாணகோ முத்
4 தரைசரு நாடு பாவிய மேற் கோ
5 வலூர் மேல் வந்து தஞ்சிற்றப்
6 படிகளை எறிந்த ஞான்
7 று பட்டான் சேவர்பரி அட்டுங் கொள்
8 ளி துருமா
9 வனூர் மக
10 ன் மாற்கட
11 லன்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண்: 1971 / 70

மாவட்டம் : வடஆர்க்காடு

வட்டம் : செங்கம்

ஊர் : கோணுங்குட்டை

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : [1]-ஆம் ஆண்டு

வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லின் மேற்பகுதி உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடதுகையில் வில்லும் வலதுகையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் வலதுகாலுக்குப் பக்கத்தில் சிமிழும், இடதுகாலுக்குப் பக்கத்தில் கலமும், குத்து விளக்கும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பகுதியிலும், இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. வீரனின் நெற்றியில் அம்பு பாய்ந்துள்ளது. . . . . காலிப்பாடியைச் சேர்ந்த ஆநிரைகளைக் கவர்ந்தபோது, நம்மடியானம்மம்ம என்பான் அவ்வா நிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. கலிய்யதண்ணன் என்பான் இக்கல்லை நட்டதாகவும் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 . . [ஒ]ன்றாவது . .
2 . . ட்டத்து மேல் வே . .
3 . . மடிகள் ளாள்கி . .
4 . . எமுடைய மாதவி . .
5 . . ன் மாரட்டன் தாள . .
6 . . . . காலிப்பாடி
7 . . ள அவ்வூர் தொ
8 [டு]றுக் கொள்ள தொறு மீ
9 ட்டு பட்டான் நம்மடி

(திருப்பவும்)

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 7-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | பிஞ்சூர் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | தந்திவிக்கிரமபன்மர் | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : இக்கல்வெட்டு மூன்று துண்டுகளாக உடைந்து வெவ்வேறு இடத்தில் கிடந்தன. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில் உள்ளது. வலது கை உடைந்து, காணப்படவில்லை. வலது காலுக்குப் பக்கத்தில் குத்துவிளக்கும் இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. வீரனது உடம்பில் இரு அம்புகள் பாய்ந்துள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் தந்திவர்மனின் 7-ஆம் ஆட்சி ஆண்டில் அடையாறு நாட்டு பல்குன்றக் கோட்டத்தைச் சேர்ந்த நந் பெருமாபுஞ்சி ஊரில் வாழும் கூதனூர் பாதனூர் காலிமாறன் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 [ . . . . . ] சய பல்லவ தந்தி
2 . . டுகு விக்கிரம பன்மற்
3 [ . . . . ] டு ஏழாவது அடையாற்று
4 [ . . . . ] ன்றக் கோட்டம் நந் பெருமா
5 புஞ்சி
6 ஊருடை
7 ய கூத
8 [னூ]ர் பா
9 தனு
10 ர் காலி
11 மாறன்
12 பட்டா[ர்]

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண் : 1971 / 73

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 10-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | தாழையூத்து | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | இரண்டாம் நரசிம்மவர்மன் | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : இடமிருந்து வலமாக கல் சரிபாதியாக உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியிலும் வலப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இடது காலின் பக்கத்தில் சிமிழ் உள்ளது. பல்லவ மன்னன் இரண்டாம் நரசிம்மவர்மனின் பத்தாம் ஆட்சி ஆண்டில் மீவேண்ணுட்டுக் கோவலூர் அரசர் பெரும்பாணதியரசரின் சேவகனும் சிற்றுபாடியில் வாழும் பனையன் என்பார் ஆடுகளைக் கைப்பற்றும்போது வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. இக்கல்வெட்டில் உள்ள எழுத்துக்கள் வேளூரில் கிடைத்த நரசிம்மவர்மனின் எழுத்துக்களை ஒத்துள்ளன.

கல்வெட்டு :

1 கோவிசைய நரசிங்கபரு
2 மற்கு யாண்டு பத்தாவது மீ
3 வேண்ணுட்டுக் கோவலூ ஊரரைச
4 ர் பெரும்பாணதியரைசர் சேவக
5 ன் சிற்றுபாடி பனையனுர் மறி
6 தொறுக் கொண்ட ஞான்று
7 பட்
8 டான்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 74

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 2-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தாழையூத்து | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | இரண்டாம் நந்திவர்மன் | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல் இரண்டாக உடைந்துள்ளது. வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் உள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் வலது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும், இடது காலுக்குப் பக்கத்தில் சிமிழும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் இரண்டாம் நந்திவர்மனின் இரண்டாவது ஆட்சி ஆண்டில் வேணாட்டு வெண்மறுக்கோட்டு வேட்டுவர் தாழையூரில் ஆநிரைகளைக் கவர்ந்தபோது தாழையூரைச் சேர்ந்த வண்ணக்க கடையனார் என்பார் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய நந்திபன்ற
2 றரையர்க்கு யாண்டு இரண்டாவ
3 து ஊணமிறையார் வேணாடிள வெண்
4 மறுக்கோட்டு வேட்[டு]வர் தாழைஊர்
5 தொறுக் கொ
6 ண்ட நான்று தா
7 ழைஊருடைய
8 வண்ணக்க கடை
9 யனார் தொறு
10 மீட்டு பட்
11 டார்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 75

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 23-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி 930 |
| ஊர் : | தாழையூத்து | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | சோழர் | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வீரனின் தலையில் அம்பு பாய்ந்துள்ளது. வலது காலுக்குப் பக்கத்தில் மாட்டின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. சோழ மன்னன் முதலாம் பரார்ந்தகனின் இருபத்து மூன்றுவது ஆட்சி ஆண்டில் பல்குன்றக் கோட்டத்து மேல் வேணாட்டுத் தாழையூரில், கள்ளர்கள் ஆநிரைகளைக் கவர்ந்தபோது, அவ்வாநிரைகளை மீட்டுத் தந்தையும் மகனும் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பர்
2 ம்மர்க்கி யாண் டிருபத்து மூன்றுவது பல்குன்ற கோ
3 ட்டத்து மேல் வேணாட்டு தாழையூர் இ[யைம்]பர்
4 [த்த]ள் எருமை தொறு கள்
5 ளர் கொள்ள போகாமைப்
6 பட்டார் தந்
7 தையுங் மக
8 னும்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 75

மாவட்டம் : வட ஆர்க்காடு

வட்டம் : செங்கம்

ஊர் : தாழையூத்து

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : சோழர்

மன்னன் : முதலாம் பராந்தகன்

ஆட்சி ஆண்டு : 23-ஆம் ஆண்டு

வரலாற்று ஆண்டு : கி. பி 930

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 3

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வீரனின் தலையில் அம்பு பாய்ந்துள்ளது. வலது காலுக்குப் பக்கத்தில் மாட்டின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பகுதியிலும் இடப்பகுதியிலும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. சோழ மன்னன் முதலாம் பரார்ந்தகனின் இருபத்து மூன்றாவது ஆட்சி ஆண்டில் பல்குன்றக் கோட்டத்து மேல் வேணாட்டுத் தாழையூரில், கள்ளர்கள் ஆநிரைகளைக் கவர்ந்தபோது, அவ்வாநிரைகளை மீட்டுத் தந்தையும் மகனும் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பரகேசரி பர்
2 ம்மர்க்கி யாண் டிருபத்து மூன்றாவது பல்குன்ற கோ
3 ட்டத்து மேல் வேணாட்டு தாழையூர் இ[யைம்]பர்
4 [த்த]ள் எருமை தொறு கள்
5 ளர் கொள்ள போகாமைப்
6 பட்டார் தந்
7 தையுங் மக
8 னும்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 76

மாவட்டம் : வட ஆர்க்காடு

வட்டம் : செங்கம்

ஊர் : தாழையூத்து

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : —

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு

இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 4

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வீரனின் மார்பில் அம்பு பாய்ந்துள்ளது. வலது காலுக்குப் பக்கத்தில் மாட்டின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன. கல்வெட்டு மேற்பகுதியிலும் பக்கங்களிலும் சிதைந்துள்ளது. வீரர்கள் இருவர் எருமை நிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக் கிறது.

கல்வெட்டு :

1 . மா[ர]பாடி மய . .
2 ர் உடையா வார்ந்தன் . .
3 சிரியு[டையா]னுங் மகன்
4 மாரயும் எருமை மீட்டு பட்டார்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வடஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 18-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | தண்டம்பட்டு | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : சாலையின் அருகில் உள்ள வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. வலது காலின் பக்கத்தில் கெண்டி உள்ளது. உருவத்தின் இடப்பக்கம் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் பதினெட்டாம் ஆட்சி ஆண்டில் மேல் வேணாட்டு ஆந்தைபாடி ஈசைபெரும்பாணரைசரு மருமக்கள் பொற்சேந்தியாரின் சேவகர் ஆநிரை கவர்ந்தபொழுது, வேணாட்டைச் சேர்ந்த நந்தியார் என்னும் வீரன் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய மயீந்திரபரு
2 மற்கு பதின்எட்டாவது மீ
3 வேணாட்டு ஆந்தைபாடி ஈசை
4 பெரும்பாணரைசரு மருமக்கள்
5 பொற்சேந்தியாஞ் சேவகரு தொறு
6 க் கொண்ட ஞான்று மீட்டு பட்டா
7 ன் [வே]ணாட்[டு]நந்தி
8 [யார்] கல் க . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 9-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | மேல் பள்ளிப்பட்டு | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் பரமேச்சுவரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : ஆனந்தவாடி காட்டின் நடுவில் உள்ள மொசவேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலின் பக்கத்தில் சிமிழும், வலது காலின் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும் வலப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் பரமேச்சுவரவர்மனின் ஒன்பதாவது ஆட்சி ஆண்டில், கோவூர் நாட்டைச் சேர்ந்த கோயில் பட்டர் ஆநிரைகளைக் கவர்ந்த பொழுது மேற்செங்கை, மாம்முடைய பாரதாயர் மகன் அவ்வாநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. கல் மூன்று பகுதியாக உடைந்து கிடந்தது.

கல்வெட்டு :

1 ஸ்ரீ கோவிசைய பர[மேச்]சுவர பருமற்கு
2 யாண்டு ஒன்பதாவது [வ-]மிறையார் வே
3 ணாடிளக் கோவூர் நாட்டு கோஇல் பட்டர் வந்
4 து தொறுக் கொண்ட நான்று மேற்செங்கை மாம்மு
5 டைய பார
6 தாயர் மக
7 ன் தொறு மீ
8 ட்டுப் . .
9 ன் முகன்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 79

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | செங்கம் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | — | | |

இடம் : செங்கம் ஏரிக்கரையில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் கழுத்திலும், இடக்கையிலும் அம்புகள் பாய்ந்துள்ளன. தொக்கைப்பாடியைச் சேர்ந்த இரையமனின் மகன் கத்தையன் என்பவன் தொக்கைப்பாடியில் ஆநிரை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ தொக்கைபாடி
2 இரையமன் மகன் கத்தைய
3 ன் தொக்கைபாடி தொறு மீட்டு
4 ப் பட்டான்

த. நா. தொ. ஆய்வுத்துறை　　　　　　தொடர் எண் : 1971 / 81

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 8-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கட்டமதகு | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : நொண்டி வேடியப்பன் கோயிலில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டு உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. வலது கையில் குறுவாள் உள்ளது. உருவத்தின் வலப்புறத்தில் இரண்டு மாடுகள் நின்ற நிலையில் உள்ளன. உருவத்தின் மேல் பகுதியிலும் வலப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இது முதலாம் பராந்தகன் காலத்துக் கல்வெட்டு. கிலியனூர் ஏரி குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு :

1 மதிரை கொண்ட கோ . .
2 தெட்டாவது மாசந்தி . .
3 கிலியனூர் ஏரி கட்டி . .
4 [அ]ன்று
5 கல்லனை
6 த் தெங்
7 கில் . .

மாவட்டம் : வடஆர்க்காடு
வட்டம் : செங்கம்
ஊர் : அந்தனூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 1

இடம் : வேடியப்பன் கோயிலில், கிழக்குப் பார்த்துள்ள நடுகல்.

குறிப்புரை : நடுகல் இடமிருந்து வலமாக இரண்டு துண்டாக உடைந்துள்ளது. அடிப்பகுதியே தற்போது வேடியப்பன் கோயிலில் உள்ளது. உடைந்திருக்கும் துண்டில் வீரனின் காலுக்கு அடியில் மாட்டின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 மு .
2 வ் இத
3 ாருமாக
4 ழியா
5 . ட்
6 டா
7 ன்

த. நா. தொ. ஆய்வுத்துறை | தொடர் எண் : 1971 / 84

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி.பி. 17-18-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | மேல் இராவந்தவாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயிலில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் வாளும் ஏந்திய நிலை. வலது தோளின் பின்புறம் அம்புறாத்தூணி உள்ளது. இடையில் உடைவாள் உள்ளது. உருவத்தின் வலப்பக்கத்தில் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு மிகவும் அண்மைக் காலத்தியதாக இருத்தல் வேண்டும். கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது.

கல்வெட்டு :

1 இரத்த[ா]ச்சி வரு

2 ஆனி ய மிள ௳[1]

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 32-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | மோத்தகல் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | | |

இடம் : ஆற்றங்கரை வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் வலது காலின் பக்கத்தில் கெண்டியும், இடது காலின் பக்கத்தில் அம்புத் தூணியும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் முப்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டில் அக்கந்தைக்கோடன் என்பவன் ஆநிரைகளை மீட்டபோது வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசைய ம . ந்திரபரும[ற்கு மு]
2 ப்பத்திரண்டாவது . . . . யை தொ
3 றுக்கொண்ட ஞான்று பொன்மோதன்ற
4 ர் சேவகன் அக்கந்தைகோடன்
5 தொறு விடுவித்துப் பட்டா
6 ன் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 32-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | மோத்தகல் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : ஆற்றங்கரை வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : வீரனது உருவம் புலியுடன் போரிடும் கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. வீரனின் இடதுகை புலியின் வாய்க்குள் உள்ளது. வலதுகை குறுவாளை ஏந்தி உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் முப்பத்திரண்டாவது ஆட்சி ஆண்டில் பொன்மோதனரின் சேவகனை வின்றண்வடுகன் என்பான் புலியுடன் போரிட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1　கோவிசைய மயேந்திர
2　பருமற்கு முப்பத்திரண்டா
3　வது பொன்மோதனர் சே
4　வகன் வின்றண்[வ]டுகன்
5　புலி குத்திப் பட்டான்
6　கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 12-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 8-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | போந்தை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | நரசிம்மவர்மன் | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. வலது கையில் குறுவாளும் இடது கையில் வில்லும் ஏந்திய நிலை. மார்பில் அம்பு பாய்ந்துள்ளது. வலது காலுக்கு அருகில் சிமிழ் உள்ளது. உருவத்தின் மேல் பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் நரசிம்மவர்மனின் பன்னிரண்டாவது ஆட்சி ஆண்டில் மேல்கொன்றை நாட்டைச் சேர்ந்த பாசாற்றுப் பகைமதரின் சேவகர் பணயநாத்தன் என்பான் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசய நரசி
2 ங்கபருமற்கு யாண்டு பன்னிரண்
3 டாவது மீகொன்றை நாட்டு பாசாற்று பகைம
4 தர் சேவகன்[1] தொறு இடுவித்து பட்டான் ப
5 ணய நாத்தன்

1. 'சேவகர்' என்று எழுதி, பின்னர் 'சேவகன்' என்று திருத்தி எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வடஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 12-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | போந்தை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | நரசிம்மவர்மன் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. வலது கையில் குறுவாளும், இடது கையில் வில்லும் ஏந்திய நிலை. வீரனது நெற்றியில் அம்பு பாய்ந்து காணப்படுகிறது. இடது காலுக்கு அருகில் சிமிழ் உள்ளது. பல்லவ மன்னன் நரசிம்மவர்மனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் மேல் வேணாட்டு பாசாறு ஆள்கின்ற, பகைமதரின் சேவகன் வண்ணக்கசாத்தன் என்பான் ஆநிரைகளை மீட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவிசய நரசிங்க
2 பருமற்கு யாண்டு பன்னிரண்டாவது மீ
3 கொன்றை நாட்டு பாசாறுள் பகைமதர் சேவகர்
4 தொறு இடுவித்து பட்டார் வண்ணக்க சாத்தனுர்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | போந்தை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 3 |
| மன்னன் : | — | | |

இடம் : மான்ய வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் ஒரு பகுதி உடைந்துள்ளது. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் நேரே பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும் வலது கையில் வாளும் ஏந்திய நிலை. சேவகன் நரிப்பளி . . . வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . . . .
2 . . வகன் நரிப்பளி . .
3 . பட்டா
4 ன் கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 2 ?-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | பெரிய கோளாப்பாடி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | | |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | ஈஸ்வரவர்மன் | | |

இடம் : ஏரிக்கரை அருகில் உள்ள வேடியப்பன் கோயிலில் நிறுத்தப்பட்டிருக்கும் நடு கல்.

குறிப்புரை : கல்லின் ஒரு பகுதியே உள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறு வாளும் ஏந்திய நிலை. வலது காலுக்குப் பக்கத்தில் சிமிழ் உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் ஈஸ்வர வர்மனின் காலத்தில் நிகழ்ந்த போரில் கொத்தி நத் . . . என்பான் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . . [யை]ய ஈச்சு
2 . . . ற்கு யாண்டு
3 . . . டாவது கீழ்
4 . . . [ணு]ட்கி நின்
5 . . . [பெ]ரும் போத்த . .
6 . . . ள் மறுச்சேந் . .
7 . . . [ர்] கொத்தி நத் . .
8 . . . [ப]ள்ளி

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 11-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 7-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | மேல் புஞ்சை | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து | வட்டெழுத்து | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | மாந்தபருமர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும் வலது கையில் வாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டி, சிமிழ், கண்ணுடி ஆகியவை உள்ளன. மாந்தபருமரின் பதினேராம் ஆட்சி ஆண்டில் கொங்கணி அரசருடைய படைத் துணையுடன் சிரி கங்க அரசர் சங்கமங்கலத்தைத் தாக்கியபோது, சிரிகங்க அரசரின் சேவகர் ஒடு . கணயர் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 [மா]ந்தபருமற்கு பதி
2 ஞென்றுவது கொங்க
3 ணி அரைசரு படை ஒடு சிரி
4 கங்கரைசரு சங்கமங்கலத்
5 தெறிந்த ஞான்று சிரிகங்கரைசரு
6 சேவகர் ஒடு . கணய
7 ர் எறிந்து பட்ட கல்

த. நா. தொ. ஆய்வுத்துறை

தொடர் எண் : 1971 / 113

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 14-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | கருங்காலிப்பாடிபட்டி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | பல்லவர் | | |
| மன்னன் : | முதலாம் மகேந்திரவர்மன் | | |

இடம் : ஐயனாரப்பன் கோயிலில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்பக்கம் திரும்பியும் நேராகப் பார்த்த நிலையிலும் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் கேடயமும் வலது கையில் வாளும் இருக்கின்றன. வலது காலுக்குப் பக்கத்தில் சிமிழும், இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டியும் உள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும் வலது பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் பதினான்காம் ஆட்சி ஆண்டில் மேல் வேணாட்டைச் சேர்ந்த கருங்காலிப்பாடியை ஆளுகின்ற கொற்றவாசிற் கருசாத்தனார் என்பாரின் மகன் கட்டங்கன்னார் என்பவர் பொற்காடான்னாரின் சேவகரும் நரிப்பள்ளியைச் சேர்ந்த வீரவாண்ணரையர் என்பாரின் மக்களுமான பொன்பானன்னோடு போரிட்டு வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 கோவியைய மசீந்திர
2 ம் பருமற்கு பதின்னான்
3 காவது மீ
4 வேண்ணா
5 ட்டு கருங்
6 காலிபாடி
7 ஆள் கொற்ற
8 வாசிற் கருசா
9 த்தனாரு மக

(திருப்பவும்)

10 ன் கட்டங்க
11 ன்ஞரு பெ[ா]ற்
12 காடான்ஞரு சே
13 வகரு நரிபள்
14 ளி வீரவாண்ண
15 ரையரு மக்கள்
16 பொன் பானன்
17 ஞரோடெறிந்து
18 பட்டாரு கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 10-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | கருங்காலிப்பாடி பட்டி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 2 |
| மன்னன் : | — | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கை வில்லேந்தியும் வலது கை உடைவாள் மீதும் உள்ள நிலை. வீரனின் உடம்பில் இரு அம்புகள் பாய்ந்துள்ளன. உருவத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு சிற்சில இடங்களில் சிதைந்துள்ளது. பத்தாவது ஆட்சி ஆண்டில் தென்வேணாட்டு மேலைக்கருங்காலிப்பாடியைச் சேர்ந்த நாகந்தைமானவடிகள் என்பான் ஊரற்று என்ற ஊரில் இறந்து படவே, ஊரழியத் தான் இருக்கலாகா என்று, மங்கள நாடுடைய அதியை இராமன் பூஷி வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ப
2 த்தாவதில்
3 தென்வேணாட்[டு] மேலைக்கருங்
4 காலிபாடி உடைய
5 நாகந்தைமான
6 வடிகள் ஊரற்றில்ப் பட
7 என்னூரழியப் போடார்
8 என்று பங்கள நாடுடைய அதியை இராம
9 ன் பூஷி

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண் : 1971 / 115

| | |
|---|---|
| மாவட்டம் : | வடஆர்க்காடு |
| வட்டம் : | செங்கம் |
| ஊர் : | கருங்காலிப்பாடிப் பட்டி |
| மொழி : | தமிழ் |
| எழுத்து : | தமிழ் |
| அரசு : | கங்கர் |
| மன்னன் : | பிரிதி கங்கரையர் அதியை இராமன் |

| | |
|---|---|
| ஆட்சி ஆண்டு : | 10-ஆம் ஆண்டு |
| வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு |
| இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| முன் பதிப்பு : | — |
| ஊர்க் கல்வெட்டு எண் | 3 |

இடம் : பெரியமலை காட்டின் மேற்கே உள்ள வேடியப்பன் கோயிலில் கிழக்கு பார்த்து நிற்கும் கல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கை வில்லேந்தியும், வலது கை வாளை உருவும் நிலையிலும் உள்ளது. வீரனின் உடம்பில் இரண்டு அம்புகள் பாய்ந்துள்ளன. உருவத்தின் மேற் பகுதியிலும், இடப் பக்கத்திலும், வலப்பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. கல் மூன்று பகுதியாக உடைந்து கிடந்தது. வலது காலின் கீழ்ப்பகுதி உடைந்து காணப்படுகிறது. பிரிதி கங்கரையர் அதியை இராமனின் பத்தாவது ஆட்சி ஆண்டில் தென் வேணாட்டைச் சேர்ந்த மேலைக் கருங்காலிப் பாடியில் வாழ்ந்து வந்த நிகம[க] தென்பலையன் என்பான் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ பிரிதியங்கரையர் அதியை இராமன் ஆள்ச்சியில்
2 யாண்டு பத்தாவதில் தென் வேணாட்டு மேலைக் க
3 ருங்கா
4 லிப்பா
5 டி இரு
6 ந்து
7 வாழு
8 ம் நிக
9 ம[க]
10 தெந்
11 பலை
12 யன் ஊ
13 ரழியப்
14 போகேன்
15 னென்று

த. நா. தொ. ஆய்வுத்துறை　　　　தொடர் எண் : 1971 / 116

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு |
| ஊர் : | கருங்காலிப்பாடிப்பட்டி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | ஊர்க் கல்வெட்டு எண் | 4 |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் மேற்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கை வில்லேந்தியும், வலது கை உடைவாள் மீதும் உள்ள நிலை. வீரனின் மார்பில் இரு அம்புகள் பாய்ந்துள்ளன. உருவத்தின் இடப்பகுதியிலும், கீழ்ப்பகுதியிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு சில இடங்களில் சிதைந்துள்ளது. தென்வேணாட்டு மேலைக் கருங்காலிப்பாடிப் பட்டியைச் சேர்ந்த பன்றயன் புளியன் என்பான் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 தென்வேணாட்டு மேலைக் கரு
2 ங்காலிப்பாடி சிலகில் காவேட்டுவைய
3 ன் அடியேன் பன்றயன் புளியனேன்
4 ஊரழியப் போதே
5 னென்று பட்டான்

மாவட்டம் : வட ஆர்க்காடு
வட்டம் : செங்கம்
ஊர் : கருங்காலிப்பாடிபட்டி
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : —
மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : சுமார் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு
இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை : —
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 5

இடம் : காட்டில் காணப்படும் வேடியப்பன் கோயிலில் உள்ள செக்கு.

குறிப்புரை : நீலாநக்கன் பெருமானம்பி என்பான் செக்கு அமைத்ததைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 . . நீலானக்கன் பெருமானம்பி மேவிச்ச செக்கு
2 மடத்தடிகள்[1]

1. . . நீலானக்கன் மடத்தடிகள் பெருமானம்பி மேவிச்ச செக்கு என்று இருக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வடஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 9-10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | இளங்குண்ணி | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | தமிழ் | | |
| அரசு : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | — | | |

இடம் : வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டில் முதற்பகுதியிலும், பக்கப் பகுதியிலும் உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. இடது காலுக்குப் பக்கத்தில் கெண்டி உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. வேணாட்டைச் சேர்ந்த இளங்குன்றி என்ற ஊரான மணிக்கல்லைக் கைக்கொண்டு முற்றுகையிட்டபோது கோதன் மேட்டிணாநி என்பானின் மகன் வாணன் வீர மரணம் அடைந்ததைக் குறிக்கிறது. . . ழிமல்லன் என்பான் இக்கல்லை நட்டுவித்தாகக் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1 வேணாட்டிளங்குன்
2 றியான வேணாட்டு மணிக்க
3 ல்ல கைகொண்டு வந்[த]
4 . . டைக்க கோதன் மேட்டிண
5 . . ணுதி மகன் வாணன் பட்டா
6 ன் . . ழிமல்லன் நடுவித்த கல்

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சக ஆண்டு 89[2]<br>கி. பி. 970 |
| ஊர் : | இராமாவரம் | | |
| மொழி : | தமிழ் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | — | | |
| மன்னன் : | — | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : நத்தமேட்டு வேடியப்பன் கோயிலில் உள்ள கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லில் வீரனது உருவம் நேராகப் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கை வில்லேந்தியும் வலது கை வாளை உருவும் நிலையிலும் உள்ளது. வீரனின் உடம்பில் அம்பும் வேலும் பாய்ந்துள்ளன. உருவத்தின் மேற்பகுதியிலும், வலப்பக்கத்திலும் இடப் பக்கத்திலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலின் அருகில் இந்நடுகல்லைச் சூழ்ந்து இன்னும் மூன்று நடுகற்கள் வீரனது உருவம் தாங்கி கீழே வீழ்ந்து கிடக்கின்றன. அவைகளில் எழுத்துகள் பொறிக்கப்படவில்லை. இச்சிற்பத்தின் அமைதி கருங்காலிப் பாடிப்பட்டியின் சிற்பத்தை ஒத்துள்ளது. கல்வெட்டில் முதற்பகுதி மட்டுமே உள்ளது.

**கல்வெட்டு :**

1 சகரை யாண்டு எண்ணூற்றுத் தொண்ணூற்று இர . .

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 6-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | சுமார் கி. பி. 8-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | மணிக்கல் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| எழுத்து : | வட்டெழுத்து | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| அரசு : | பல்லவர் ? | | |
| மன்னன் : | — | | |

இடம் : வீரமணியான் கல் அருகில் உள்ள உடையார் கொல்லையில் கிழக்குப் பார்த்து நிற்கும் நடுகல்.

குறிப்புரை : கல்லின் ஒரு பகுதி உடைந்துள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும் வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் வலப் பக்கத்தில் குத்து விளக்கு உள்ளது. இடது காலுக்குப் பக்கத்தில் சிமிழும் கெண்டியும் உள்ளன. உருவத்தின் இடப் பக்கம் தோரணம் உள்ளது. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு மன்னனின் ஆறுவது ஆட்சி ஆண்டில் நிகழ்ந்த போரில் வீரனொருவன் வீர மரணம் அடைந்ததைக் குறிப்பதாகத் தெரிகிறது. கல்வெட்டு கோவிசைய என்று ஆரம்பமாவதால் பல்லவ மன்னனைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

கல்வெட்டு :

1 . . ஸ்ரீ கோவிசைய . . . .
2 ருமற்கு யாண் டாறுவது . . . .
3 ற்று மேல்வேணுடு ணமீ . . . .
4 க் [கொற்றேறுரி] கந்தவாணரைச . . .
5 . . . . . . . தொ . . . .

த. நா. தொ. ஆய்வுத்துறை — தொடர் எண் : 1971 / 122

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | — |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 10-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | காரப்பட்டு | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | சோழர் | | |
| மன்னன் : | முதலாம் பராந்தகன் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |

இடம் : நத்தமேட்டு வேடியப்பன் கோயிலில் உள்ள நடுகல்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதியே உள்ளது. கல்லில் வீரனது உருவம் இடப்புறம் பார்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. இடது கையில் வில்லும், வலது கையில் குறுவாளும் ஏந்திய நிலை. உருவத்தின் மேற்பகுதியில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் ஆட்சியைச் சார்ந்த இக்கல்வெட்டு பல்குன்றக் கோட்டத்து கீழ் வேணாட்டைக் குறிக்கிறது.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்தி ஸ்ரீ மதிரை கொ . .
2 சரிபன்மற்கு யாண்டு . . ப . .
3 ன்றக் கோட்டத்துக் . .
4 வேணாட்டு மங்க[ள] . .
5 ட்டபடுத்து க ..
6 ல எக்குறுக . .

த. நா. தொ. ஆய்வுத்துறை தொடர் எண் : 1971 / 127

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் : | வட ஆர்க்காடு | ஆட்சி ஆண்டு : | 24-ஆம் ஆண்டு |
| வட்டம் : | செங்கம் | வரலாற்று ஆண்டு : | கி. பி. 9-ஆம் நூற்றாண்டு |
| ஊர் : | மஷார் | இந்திய கல்வெட்டு ஆண்டு அறிக்கை | — |
| மொழி : | தமிழ் | | |
| எழுத்து : | தமிழ் | முன் பதிப்பு : | — |
| அரசு : | பல்லவர் | ஊர்க் கல்வெட்டு எண் | 1 |
| மன்னன் : | கம்பவர்மன் | | |

இடம் : சனீஸ்வரன் கோயிலில் நிற்கும் கல்.

குறிப்புரை : பல்குன்றக் கோட்டத்துக் கீழ்வேணாட்டுக் காந்தளூர்க் கூற்றத்தைச் சேர்ந்த மல்சாறு பிரிதிகங்கரையர் மகனுர் காமடிகள் என்பவர், ஆண்டபொழுது வாண கோப்பாடி வடகரை நாட்டுப் பனேயூர் வஞ்சித்தொண்டிப் பெருமானின் மகன் அகணயன் புதுத்திருதடி ஏரிக்கு நிலம் அளித்ததைக் குறிக்கிறது. பிற்காலத்தில் இக்கல்வெட்டின் மீது பிறை, முக்கோணம், சூலம், இரு குத்து விளக்குகள் ஆகியவை செதுக்கப்பெற்றுள்ளன.

கல்வெட்டு :

முதல் பக்கம்

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிசைய கம்பவிக்
2 கிரம[ற்]கி யாண்டு உ௰சு ஆவ
3 து பல்குன்றக் கோட்டத்து
4 க் கீழ் வேணாட்டுக் காந்தளூர்
5 க் கூற்றத்து மல்சாறு பிருதிய
6 ங்கரையர் மகனுர் காமடிக
7 ள் இந்நாடாள வாணகோப்
8 பாடி வடகரை நாட்டுப் பனே
9 யூர் வஞ்சி தொன்டி பெருமா
10 ன் மகன் அகணயன்
11 புதுத் திருதடி ஏரிக்கு இ
12 ச்செறுவட்டினன் இது விறக்

(திருப்பவும்)

13 குவார்[1] ஏழா நகரத்துக் கீழா
14 நரகம் புகு[வான்] . . . . . .

## இரண்டாம் பக்கம்

1 கோவாயும்
2 குடியாயும்
3 இத்தன்மம்
4 ரக்ஷிப்பான்
5 அடி என்மு
6 டி மேலின

1. விற்குவார் என்றும் படிக்கலாம்.